பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 12 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பத்து லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் பிறந்தநாள் இன்று விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
3. தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 38 ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு கோடி ரூபாய் செலவில் வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.
4. காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் மூன்று பேர் பஞ்சாப் மாநிலம் பிலிப்பிட் மாவட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
5. நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பத்து லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியிலிருந்து இன்று காணொலி வாயிலாக அரசு அலுவலகங்களில் பணியாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 71 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி அவர் உரையாற்றினார்.

மத்திய அரசின் பல்வேறு அலுவலகங்கள், துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு இளைஞர்களுக்கு பணி நியமனம் செய்யும் நடைமுறையை கடந்த பத்து ஆண்டுகளாக தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொய்வின்றி மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இளைஞர்களின் திறமைகளுக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள திறன்மிக்க இளைஞர்களுக்கான வாய்ப்புகளை உறுதி செய்வதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதோடு மட்டுமன்றி கிராமப்புறங்களிலும் சுய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் முயற்சி வெற்றிபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா, சுயசார்பு இந்தியா இயக்கம், ஸ்டார்ட்-அப் மற்றும் ஸ்டார்ன்டப்-அப் இந்தியா இயக்கங்கள், டிஜிட்டல் இந்தியா உள்ளிட்ட அனைத்து திட்டங்கள் மூலமும் இளைஞர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேலைவாய்ப்புகள் கிடைத்து வருவதாக அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறை உற்பத்தியிலும் சுயசார்பு இந்தியா இயக்கம் கொண்டுவரப்பட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சி வெற்றிபெற்றுள்ளதகாவும் அவர் தெரிவித்தார்.

இந்த துறையிலும் அதிக அளவில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

செல்போன் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது என்றும், புத்தொழில்களுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் உலக அளவில் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா விளங்குகிறது என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் இன்று வழங்கப்படும் 71 ஆயிரம் வேலைவாய்ப்புக்களில் 50 ஆயிரம் இடங்கள் துணை ராணுவப் படையில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்தார்.

நாடடில் 45 இடங்களில் ரோஜ்கார் மேளா எனப்படும் மெகா வேலைவாய்ப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தமிழகத்தில் சிவகங்கை, திருவள்ளூர் ஆகிய இடங்களில் இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்றன.

சிவகங்கையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் மத்திய இணை அமைச்சர் திரு பூபதி ராஜூ ஸ்ரீனிவாச வர்மா கலந்து கொண்டார்.

இந்த முகாம் மூலம் வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் ஏழை குடும்பத்தில் பிறந்த தங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மத்திய அரசுக்கும், பிரதமர் திரு நரேந்திரமோடிக்கும் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - இளைஞர்கள் ) ---- 48 செகண்ட்*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் மத்திய இணை அமைச்சர் திரு சந்திரசேகர் பெம்மசானி கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்திய கத்தோலிக்க பிஷப் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களை அவர் சந்தித்து உரையாடுகிறார்.

கிறிஸ்தவ தேவாலயங்களின் **Cardinals, Bishops** ஆகியோரையும் அவர் சந்தித்து பேசுகிறார்.

**[]<<<>>>[]**

முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் பிறந்தநாள் இன்று விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், புதுதில்லியில் உள்ள கிஷான் காட்டில் அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

அப்போது பேசிய அவர், விவசாயிகள் மற்றும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் சரண்சிங் என்று புகழாரம் சூட்டினார்.

அடுத்த ஆண்டில் 25-வது விவசாயிகள் தினம் கொண்டாடப்படுவதாகத் தெரிவித்த அவர், ஓராண்டு முழுவதும் விவசாயிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ளவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுவோம் என்று கூறியுள்ளார்.,

விவசாயிகள் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தினார்.

சரண்சிங் பிறந்த நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி, விடுத்துள்ள செய்தியில், எழை எளிய மக்களுக்காகவும், விவசாயிகள் நலனுக்காகவும் பாடுபட்டவர் சரண்சிங் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டுக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றென்றும் நினைவுகூரத்தக்கவை என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் வேளாண் துறைக்கு 38 ஆயிரத்து தொள்ளாயிரத்து நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கான நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

சேலத்தை அடுத்த சூரமங்கலத்தில் உழவர் சந்தையில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், விவசாயிகளிடம் அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள், இடைத்தரகர்களின் தலையீடின்றி நேரடியாக தங்கள் விளைப்பொருட்களை சந்தைப்படுத்துவதால் அதிக லாபம் பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

உழவர் சந்தையில் விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதகாவும் அவர் கூறினார்.

விவசாயிகள் நலனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே மாநில அரசு விவசாயிகளுக்கென தனி நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்துள்ளதாகவும் திரு ஏ வ வேலு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இந்தியாவிலிருந்து ஓமன் நாட்டுக்கு முட்டை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தத்தை அந்நாட்டுடன் மேற்கொண்டுள்ள மத்திய அரசுக்கு தமிழகத்தின் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணையாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் முடிவு தங்கள் தொழிலுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் உள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - முட்டை உற்பத்தியாளர் )-45---- செகண்ட்*

**[]<<<>>>[]**

காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் மூன்று பேர் பஞ்சாப் மாநிலம் பிலிப்பிட் மாவட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இம்மாதம் 19-ஆம் தேதி பஞ்சாபில் குர்தாஸ்பூர் காவல் சாவடியில் இந்த தீவிரவாதிகள் கையெறிக் குண்டு தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.

பஞ்சாப் மற்றும் உத்திரபிரதேச மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறையினர் கூட்டாக மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின்போது இந்த தீவிரவாதிகள் பதுங்கி இருந்து காவலர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

அப்போது கூட்டுப்படையினர் நடத்திய பதில் தாக்குதலில் இந்த தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த மூன்று பேரும் காலிஸ்தான் கமாண்டோ என்ற இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த தீவிரவாதிகளிடமிருந்து இரண்டு ஏ கே ரக துப்பாக்கிகளும், இரண்டு கை துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், லடாக், பல்திஸ்தான், மொஸாஃபராபாத் உள்ளிட்ட பகுதிகளில் வானிலை மிகவும் மோசமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, ஒடிசா, மேற்குவங்கம், சிக்கிம், ராஜஸ்தான், மணிப்பூர் மலைப்பகுதிகளில் இரவிலும், காலை நேரங்களிலும் கடுமையான பனிமூட்டம் நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஆந்திரப்பிரதேசம், ராயலசீமா ஆகிய இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அது கூறியுள்ளது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.,

ஹைதராபாத்தில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.